**செய்தி வெளியீடு எண்:93** **நாள்:05.02.2021**

# செய்தி வெளியீடு

அரசின் பல்வேறு நலத்திட்ட பயன்கள் அனைத்து பிரிவினருக்கும் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டி புள்ளி விவரங்களை பெறுவதற்காகவும், ‘‘தற்போதைய நிலவரப்படி சாதிவாரியான அளவிடக்கூடிய முழுமையான புள்ளி விபரங்களை (Quantifiable data) சேகரிக்கும் வழிமுறைகளை முடிவு செய்து, அப்புள்ளி விபரங்களைத் திரட்டி அரசுக்கு அறிக்கை அளிக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் A.குலசேகரன் அவர்களின் தலைமையில் ‘‘தமிழ்நாட்டில் சாதிவாரியான அளவிடக்கூடிய முழுமையான புள்ளி விபரங்களை சேகரிக்கும் ஆணையம் (Commission for Collection of quantifiable data on castes, communities and Tribes of Tamil Nadu)” அமைத்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி ஆணையத்தின் அலுவல் சார்ந்த உறுப்பினர்களின் இரண்டாவது கூட்டம் 05.02.2021 அன்று சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆய்வுக் கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சாதிவாரி கணக்கெடுப்புக்கான விவரங்களை சேகரிப்பதற்கான படிவங்கள் குறித்து ஆலோசனைகள் பெறப்பட்டது.

இக்கூட்டத்தில், அரசு முதன்மைச் செயலர், பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, டாக்டர். பி. சந்தரமோகன், இ.ஆ.ப., பொருளாதாரம் மற்றும் புள்ளியல் துறை ஆணையர், திரு. அதுல் ஆனந்த், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர், திரு. சி. காமராஜ், இ.ஆ.ப., ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, திரு. சி. முனியநாதன், இ.ஆ.ப., ஆணையத்தின் உறுப்பினர் –செயலர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர், முனைவர். மா. மதிவாணன், இ.ஆ.ப., ஆணையர், நகராட்சி நிர்வாகம், முனைவர் கே. பாஸ்கரன், இ.ஆ.ப., ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, முனைவர் கே. எஸ். பழனிசாமி, இ.ஆ.ப, ஆணையர், சமுதாய பாதுகாப்புத் திட்டம் திரு. என்.வெங்கடாசலம், இ.ஆ.ப., இயக்குநர், சிறுபான்மையினர் நலத்துறை முனைவர் எஸ். சுரேஷ்குமார், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. சு. பழனிசாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு மின் ஆளுகை முகமையின் முதன்மை இணை இயக்குநர், திரு. கமல் கிஷோர், இ.ஆ.ப., மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சி, பழங்குடியினர் நலத்துறை, நகர பஞ்சாயத்து உள்ளிட்ட துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**